# 8 எளிமையான வகிபாக விளையாட்டுகள்

**இலக்கு**

*வகிபாக விளையாட்டுகள் வகுப்பினைத் திடப்படுத்துவன. அவை சூழ்நிலைகள், எழுத்துருக்கள் பற்றிய ஆழமான விளக்கத்தை ஊட்டுவதுடன் மொழிப் பயிற்சியின் முதன்மையான வடிவத்தைக் குறிப்பன. இந்த வகையில், பிள்ளைகள் தங்களை எடுத்துரைக்கவும், வாதிடவும், மொழியூடாகப் படைக்கவும், அதனைத் திறம்பட நடைமுறைப்படுத்தவும் கற்கின்றனர்.*

மழலையர் - தரம் 3 | 10 - 25 மணித்துளிகள்

**கருவிகள:**
முடியுமாயின் சில காட்சிப்பொருட்கள்

**குறிப்பு:**

நவீன மொழிப் பயன்பாட்டுக்கு மாறாக #26-28 (அரை-உண்மை நாடகம், கற்பனை நாடகம், அரங்க நாடகம்) பிள்ளைகளினாலேயே இந்த பயிற்சியில் தரப்பட்ட விளையாட்டு மிகவும் எளிமையாக அமைந்து, மாணவர்களால் முடிவுசெய்யப்பட்ட மிகவும் எளிமையான வகிபாக நாடக வடிவங்கள் என்பன பின்வரும் மதியுரைகளாகும். **பா.மொ.க** வில் இவை குறைந்த வயதுப் பிள்ளைகளுடன் பயிற்சி செய்யப்படுகின்றன.

---

**நடைமுறை:**

- குழுக்களுக்கான செயற்பாடு: நீங்கள் இணைந்து நடித்துக்காட்ட விரும்பும் அன்றாட உரையாடற்காட்சி ஒன்றினைத் தெரிவு செய்யுங்கள். நகைச்சுவையான ஒன்றை நடித்துக் காட்டலாம் உங்கள் தாய்நாட்டுக்கு விடுமுறையில் சென்றதிலிருந்து ஒரு காட்சி, மொழியைத் தவறாக விளங்கிக் கொள்ளுதல், பள்ளியிலிருந்து ஏதாவதொன்று… ஒவ்வொரு காட்சியும் ஆகக் கூடியது 5 நிமிடங்கள் நடித்துக் காட்டப்பட வேண்டும் சிலவேளைகளில் இன்னும் கூடிய மதியுரைகள் தேவைப்படலாம்.



- குழுக்கள் 10 நிமிடங்கள் முன்னாயத்தம் செய்தபின் தங்கள் காட்சியை இன்னொரு குழுவிற்கோ, முழுவகுப்பிற்கோ நடித்துக் காட்டுவார்கள். ஏனைய மாணவர்கள் முன்னாயத்தம் செய்யப்பட்ட வினாக்களின் அடிப்படையில் விமர்சனம் செய்வார்கள். ( எ.கா இந்தக்காட்சி எங்களுக்கு ஏன் பிடித்தது? ஏன் பிடிக்கவில்லை? காட்சிப்படுத்தலும் விளங்கிக்கொள்ளுதலும் எவ்வாறு இருந்தது? மொழிப்பயன்பாட்டில் எது கவனிக்கப்பட்டது?.
- சற்றுக் கடினமான #26 – 28(உண்மைநாடகம், கற்பனை நாடகம்) மாறாக கீழ்க்காணும் மதியுரை மிக எளிமையாக மாணவர்களால் சுயமாக உருவாக்கப் பெற்ற அமைப்பையே கருத்தில் கொள்கிறது. அதாவது பா.மொ.க வில் குறைந்த வயதுப் பிள்ளைகளும் பயிற்சி செய்யப்படும் வகிபாக நாடக வடிவங்களைக் குறிக்கின்றது.

**மாற்றுவழி:**

- ஒவ்வொரு வாழ்நாள் காட்சிக்கு பதிலாக, குறிப்பிடப்பட்ட ஒரு காட்சியிலிருந்து தொடங்குதல்: கற்பனைக் கதையுலகிலிருந்து ஏதாவதொன்று, எதிர்காலத்திலிருந்து (நான் 50 அகவையை எட்டும் போது), விலங்குகளின் உலகிலிருந்து ஏதாவதொன்று, முதலியன, இதற்கு #26-28யும் பார்க்கவும்.

---

**குறிப்புகள்:**

- தெளிவான அறிவுறுத்தல்கள் இன்றியமையாதன: ஏற்பாடு செய்வதற்கும் நடித்துக் காட்டுதற்குமான நேரக் கட்டுப்பாடு, சண்டை அல்லது ஒருவரைத் துரத்திச் செல்லும் காட்சி இருக்கக் கூடாது, முடிந்த அளவுக்கு உரையாடல் அமைந்திருத்தல் வேண்டும்.
- இப்பயிற்சிக்கான நேர வரையறை விருப்பத்திற்கு ஏற்ப மாறுபடலாம். அதிக நேரம் எடுத்துக்கொண்டால் நீண்ட உரையாடல்கள் நீளமாவதோடு குழுக்களையும் பெரிதாக்கலாம். மேலும் உரையாடல்களை தேவையான பொருட்கள் மற்றும் சிறிய பின்புலன்களையும் கொண்டு விரிவு படுத்தலாம்.

I